# கிறிஸ்துவின் பரமேறுதல்

கிறிஸ்து பரமேறினபொழுது மனிதத்தன்மையுடனையே பரமேறினார். ஏனெனில் கிறிஸ்துவின் மனிதத்தன்மை என்றென்றும் தொடரும் ஒன்றாகும். அவர் மனித சரீரத்தை விட்டுவிட்டு செல்லாமல் அவர் மனிதத்தன்மையோடுதான் போனார். அப்படியெனில் அவர் நம்மைப் போன்ற சாதாரண மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய மனித உடலோடு சென்றார் என்பது பொருளல்ல. மனிதத்தன்மையை உடையவராகத்தான் இருக்கிறார்; அந்த மனிதத்துவம் நித்திய நித்தியமானது; அது தொடரக்கூடியது ஆனால் அவர் மனித உடலோடு பரமேறவில்லை. மறுரூபமலையில் அவர் காண்பித்த அந்த மகிமையின் சரீரத்தோடு இருக்கிறார் ஆயினும், அந்த மனிதத்தன்மையை அவர் விட்டுவிடவில்லை. அவர் பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்தபோது எவ்வாறு தன் இறைத்தன்மையை விட்டுவிடவில்லையோ அவ்வாறே பரமேறும்போதும் தன் மனிதத்தன்மையை விட்டுவிடவில்லை.

## 1. கிறிஸ்துவின் பரமேறுதல் முன்னறிவிக்கப்பட்டது

தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்; தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும்பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர் (சங்கீதம் 68:18)

மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்? (யோவான் 6:62) இங்கு இயேசுகிறிஸ்துவே தம்முடைய பரமேறுதல் குறித்து முன்னறிவித்திருக்கிறார்.

தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்...நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார். (யோவான் 13:32, 36) 'உன்னதத்திற்கு ஏறி', 'தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார்' மற்றும் 'போகிற இடம்' ஆகிய வார்த்தைகள் அவருடைய பரமேறுதலை குறிக்கிறது.

## 2. கிறிஸ்துவின் பரமேறுதல் அப்படியே நிறைவேறியது

இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது (அப் 1:9) – இது ஒரு புராணக்கதையாக சொல்லப்படாமல் அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நிகழ்வு மனிதர்களுடைய கண்களுக்கு முன்பாக நிகழ்ந்தது.

- இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார் (எபேசியர் 4:10)
- ...மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் (1தீமோ3:16)
- வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்...(எபி 4:14)

கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார் (எபி 9:11,12)

அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார் (எபி 9:24). இப்படி அவர் பிரவேசித்திருக்கிறார்; அவர் ஏறிச் சென்றார்; அவர் மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டார் என்கிற செய்திகள் பல இடங்களிலே வேதாகமத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

## 3. உயர்த்தப்பட்ட கிறிஸ்து இப்பொழுது எங்கே இருக்கிறார்?

மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய்.. (எபி 8:1)

உமது கரம் உமது வலதுபாரிசத்துப் புருஷன்மீதிலும், உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷகுமாரன்மீதிலும் இருப்பதாக (சங்கீதம் 80:17). 'வலதுபாரிசத்துப் புருஷன்' என்கிற வார்த்தை எபிரெய பதத்தில் 'iosh' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு 'மனிதன்' என்றுதான் பொருள். அதேபோல 'மனுஷகுமாரன்' என்பதற்கு ஆதாம் என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதாம் என்றால் 'ஹியூமன் பீயிங்' என்று பொருள். ஆக, அவர் வலதுபாரிசத்தில் இருக்கிறவராக இருந்தாலும்கூட அவர் மனிதத்தன்மையோடு தான் இருக்கிறார். எனவே எந்த சரீரத்தை அவர்கள் சிலுவையில் அறைந்தார்களோ அதே சரீரம் உயிரோடு எழுந்து மறுரூபமாக்கப்பட்டது. இது குறித்து 1கொரி15ம் அதிகாரத்தில் விவரமாக காணலாம். நமக்கும் இதேபோல ஒரு நிலைதான் கிடைக்கும் என்று தெளிவாக எழுதியிருக்கிறார்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பது நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது. பெந்தெகோஸ்தே நாளின் பிரசங்கத்தின் கருப்பொருளும் கூட கிறிஸ்து உயிரோடு எழுந்தார் என்கிற விஷயம் ரொம்ப முக்கியமாக இருக்கிறது

## 4. மகிமையின் கிறிஸ்துவை கண்ட சாட்சிகள்

இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார் (அப் 2:32,33)

அவன் (முதல் இரத்தசாட்சியாகிய ஸ்தேவான்) பரிசுத்த ஆவியிலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து: தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில்

இயேசு நிற்கிறதையும் கண்டு...(அப் 7:55) – தன்னை வரவேற்க தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் எழுந்து நிற்கும் காட்சியைக் கண்டான்.

அப் 9:3–6; 22 6–9 – இந்தப் பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்துவை நேரடியாக பார்த்ததாக குறிப்பிடவில்லை. அவரை சுற்றி ஒளி இருந்தது; அந்த ஒளியின் பிரகாசத்தைத்தான் கண்டார் என்றுதான் பார்க்கிறோம் ஆனால் 26:19ல் அகிரிப்பா ராஜாவிடம் பவுல்: அகிரிப்பா ராஜாவே நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை என்கிறார். ஆக, அது மகிமையின் கர்த்தரை அவர் கண்ட அனுபவத்தைத்தான் அவர் அங்கே பதிவு செய்கிறார்.

யோவான் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரை கண்டேன் என்று சொல்லி குறிப்பிடுகிறார் (வெளி 1:13–18). அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன். ஆக, மகிமை அடைந்த கிறிஸ்துவை கண்ட சீடர்களின் சாட்சியங்கள் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

## 5. பரமேறிய கிறிஸ்துவின் தற்போதைய ஊழியம்

a. **நமக்காக அவர் பரிந்து பேசுகிறார்** – நம்முடைய பிரதிநிதியாக நிற்கிற ஒருவர் நம்மைப்போன்ற ஒருவராகத்தான் இருக்கவேண்டும். ஆகவேதான் அவர் மனிதத்தன்மையோடு பரமேறினார். அவருக்கு தெய்வத்தன்மையும் இருப்பதினால் தெய்வத்தினிடத்தில் சேரமுடியும்.

<u>எப்படி பரிந்து பேசுகிறார்?</u>

i. மத்தியஸ்தராக அவர் பரிந்து பேசுகிறார் (1 தீமோ 2:5 ) – தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர்.

ii. பிரதான ஆசாரியனாக – ஆரோனைப்போல அல்ல; இவருடைய பிரதான ஆசாரியர் ஊழியம் மேம்பட்டது. தேவனுடைய வீட்டிற்குள் ஊழியம் செய்த பிரதான ஆசாரியர்கள் போல இல்லாமல் தேவனுடைய வீட்டின் மேல் ஊழியம் செய்த பிரதான ஆசாரியர் இவர்; அதாவது இவருக்கு அதிகாரம் இருக்கிறது.
வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்...(எபி 4:14).

- பிரதான மேய்ப்பர் (1பேதுரு 5:4)
- ஆடுகளுடைய பெரிய மேய்ப்பன் (எபி 13:20)

b. **நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிக்கொண்டு இருக்கிறார் (யோவான் 14::2,3)** நாம் மரித்த பிறகு நமக்கு தேவனுடைய சமூகத்தில் ஒரு இடம் இருக்கிறது. நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் (பிலி 3:20).

இதுதான் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களின் நம்பிக்கை. என்னுடைய வாழ்க்கை முடிந்த பிறகு எனக்கு பரலோகத்தில் ஒரு இடம் இருக்கிறது. நிச்சயமாக என்னுடைய இடம் நரகத்தில் இல்லை ஏனென்றால் நரகத்தின் தண்டனையை அவர் கல்வாரி சிலுவையிலே ஏற்கனவே

அடைந்து தீர்ந்துவிட்டார்; அவரை நான் விசுவாசிக்கிறபோது பரலோக வாழ்க்கை எனக்கு சொந்தமாக கிடைத்தது. நான் எதுவும் செய்யத்தேவையில்லை. என் இரட்சகர் எல்லாவற்றையும் முடித்துவிட்டார். அது மட்டுமல்ல ஒரு ஸ்தலத்தையும் நமக்காக ஆயத்தம் பண்ணி நான் இருக்குற இடத்துல நீயும் வா என்று வாக்குகொடுத்துள்ளார். இன்னும் சில பேர் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக அவர் தம்முடைய வருகையை தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறார்.

c. **மகிமையின் கர்த்தர் காணப்படாத தம்முடைய பிரசன்னத்தை அளிக்கிறார்:** அவர் பரலோகத்திற்கு போனதால் இந்த பூமியில் இல்லை என்கிற ஒரு கருத்தை சொல்லிவிடக்கூடாது. அவர் எல்லா இடத்திலும் இருக்கிறவர். அவர் எல்லா இடத்திலும் இருந்தால் மட்டுமே கடவுளாக இருக்க முடியும். அவருடைய மகிமையின் காணக்கூடிய அந்த பிரசன்னத்தைத்தான் அவருடைய வருகை என்று சொல்லுகிறோம். அவர் இப்பொழுதும் இருக்கிறார் (மத்தேயு 18:20;28:20)

- இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார் – இது கர்த்தராகிய இயேசுவினுடைய தொடரும் மகிமையின் பிரசன்னம்.
- இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.

d. **அவர் கர்த்தருடைய அதை சபையை கட்டிக் கொண்டிருக்கிறார்.**

ஒரு சபையின் ஊழியக்காரன் என்றால் அது அந்த மந்தைக்கு நியமிக்கப்பட்ட ஒரு வேலைக்காரனே தவிர, அவர்களுடைய தலைவன் கிடையாது. இந்த சிந்தை இருக்குமானால் அந்த சபையின் மீது உரிமை பாராட்டமாட்டோம் மாறாக அவர்களுக்கு எப்படி நம்ம உதவி செய்யலாம் என்று யோசிப்போம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து: என் சபையை கட்டுவேன் என்று சொன்னார் (மத் 16:18). சபை அவருடையது; அதில் எனக்கு என்ன வேலை கொடுக்கிறாரோ அதைத்தான் செய்யணும். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள் (எபேசியர் 2:21,22)

e. **அதேபோல திருச்சபையை அவர் போஷித்து காப்பாற்றுகிறார்**

கர்த்தர் சபையை போஷித்து காப்பாற்றுவது போல... (எபேசியர் 5:29). சபையை போஷிக்க கர்த்தர் சிலரை ஊழியர்கள்; மூப்பர்கள்; போதகர்களாக வைத்திருக்கிறார். வரங்களை கொடுத்திருக்கிறார். சிலபேருக்கு வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது; மட்டுமல்ல சிலபேர் வரங்களாகவே இருக்கிறார்கள்.